எவ்வளவு அறிவிப்புகளைச் செய்தாலும் வாக்கு விழாது என்று தெரிந்தே

# தமிழ்நாட்டை ஒன்றிய பா.ஜ.க. அரசு பட்ஜெட்டில் புறக்கணித்திருக்கிறது!

## அமைச்சர் எஸ்.ரகுபதி கண்டனம்!

சென்னை, பிப். 4-

**“எவ்வளவு அறிவிப்புகளைச் செய்தாலும் வாக்குகள் விழாது என்று தெரிந்தே தமிழ்நாட்டை பா.ஜ.க. ஒன்றிய பட்ஜெட்டில் புறக்கணித்துள்ளது கண்டனத்துக்குரியது” என்று அமைச்சர் எஸ்.ரகுபதி அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.**

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

வழக்கமாக ஒன்றிய பட்ஜெட் தாக்கல் செய்யப்படும் சமயத்தில் சட்டப்பேரவைத் தேர்தல் நெருங்கி வரும் மாநிலங்கள் கொண்டாடக்கூடிய அம்சங்கள் இருக்கும். ஆனால், ஒன்றிய பா.ஜ.க. அரசின் இப்போதைய பட்ஜெட்டில் தமிழ்நாடு கொண்டாட எதுவுமே இல்லை. பா.ஜ.க.விற்குச் சித்தாந்த ரீதியில் சிம்மசொப்பனமாக இருக்கும் ஒரே மாநிலம் தமிழ்நாடுதான். தமிழர்கள் மீது பா.ஜ.க. கொண்டிருக்கும் வன்மம் ஒருபோதும் தீராது என்பதை மோடி அரசு தாக்கல் செய்த பட்ஜெட் நிரூபித்து விட்டது.

### பெயரளவு அறிவிப்புகள் தான்!

தமிழ்நாடு என்கிற பெயரே இல்லாத பட்ஜெட்டை கடந்த காலங்களில் தாக்கல் செய்த ஒன்றிய பா.ஜ.க. அரசு, அதற்குக் கடும் எதிர்ப்பு கிளம்பியதால் இந்த முறைப் பெயருக்காவது தமிழ்நாடு என்ற வார்த்தையைச் சேர்த்துவிடுவது என்று குறியாக இருந்திருக்கிறார் நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன். அதுவும் பெயரளவு அறிவிப்புகள்தான். தமிழ்நாட்டிற்கென பிரத்தியேகமான சிறப்புத் திட்டங்கள் எதையும் பட்ஜெட்டில் அறிவிக்கவில்லை.

கடந்த காலத்தில் பீகார் மற்றும் ஆந்திர மாநில சட்டப்பேரவைத் தேர்தலைக் கருத்தில் கொண்டு திட்டங்களை அள்ளி வழங்கியது ஒன்றிய பா.ஜ.க. அரசு. குறிப்பாக ’பீகார் பட்ஜெட்டா!’ என சொல்லும் அளவிற்கு, வெள்ளத் தடுப்புப் பணிகளுக்கு 11 ஆயிரம் கோடி, மூன்று தேசிய நெடுஞ்சாலைகளை அமைக்க 26 ஆயிரம் கோடி, பெகல்பூர் மின் நிலைய திட்டத்திற்கு 21 ஆயிரம் கோடி எனச் சுமார் 70 ஆயிரம் கோடிக்குச் சிறப்புத் திட்டங் களை அறிவித்தது மோடி அரசு. ஆனால், இப்போதும் தமிழ்நாட்டை வழக்கம் போலவே புறக்கணித்திருக்கிறார்கள்.



மாநிலங்களுக்கான வரிப்பகிர்வை 41 சதவிகிதத்தில் இருந்து 50 சதவிகிதமாக உயர்த்த வேண்டும் என்ற நமது நீண்ட காலக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளது. மோடி குஜராத் முதலமைச்சராக இருக்கும்போது, 50 சதவிகித வரிப் பகிர்வு கேட்டுப் போராடினார். அவர் பிரதமர் ஆன பிறகு அதனைச் செயல்படுத்த மறுக்கிறார்.

விடுவிக்கப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள மாணவர்களின் படிப்புக்கான சமக்ரா சிக்ஷா நிதி 3,548 கோடி ரூபாய், தமிழ்நாடு சிறப்பாகச் செயல்படுத்தி வரும் ஜல்ஜீவன் திட்டத்துக்கான 3,112 கோடி ரூபாய் நிதி போன்றவற்றை விடுவிப்பது குறித்து பட்ஜெட்டில் எந்த அறிவிப்பும் இல்லை.

### கோவை– மதுரை மெட்ரோ அறிவிப்பில்லை!

கோவை, மதுரை மெட்ரோ ரயில் திட்டம் பற்றி அறிவிப்பும் இடம்பெறவில்லை. அமெரிக்காவின் வரிவிதிப்பால் பல்லாயிரம் கோடி இழப்பை சந்தித்திருக்கும் திருப்பூர் ,கோவை தொழிற்துறையை மீட்பதற்கு ஆக்கப்பூர்வ அறிவிப்புகள் எதுவும் இல்லை. தேர்தல் நடக்கும் மாநிலங்களை கவருவதற்காக பட்ஜெட்டில் சிறப்புத் திட்டங் களை அறிவிக்கும் நாடகத்தைக் கூட தமிழ்நாடு என்றால் புறக்கணிக்கிறது ஒன்றிய பா.ஜ.க. அரசு. நாட்டின் பொருளாதாரத்திற்கு 9 விழுக்காடு பங்களிப்பைச் செய்யும் தமிழ்நாட்டிற்கான வரிப்பகிர்வு வெறும் 4 சதவிகிதமாகக் குறைக்கப் பட்டதால் ஆண்டுக்குச் சுமார் ரூ.5,000 கோடி நிதி இழப்பு ஏற்படும்.

### பீகாருக்கும் – ஆந்திராவுக்கும் வாரிக் கொடுப்பார்கள்!

பொதிகை மலையில் டிரெக்கிங், பழவேற்காட்டில் பறவைகளைக் கண்காணிக்க மூன்று புதிய கோபுரங்கள் அறிவித்திருக்கிறார்கள். இதெல்லாம் ஒன்றிய அரசின் அறிவிப்பா? ஆட்சியைத் தாங்கி பிடிக்கும் பீகா ருக்கும் ஆந்திராவுக்கு வாரிக் கொடுப்பார்கள். ஆட்சி அமைக்கக் கூடிய மாநிலங்களில் சட்டமன்றத் தேர்தல் நடந்தால் ஆயிரம் கோடிகளில் திட்டங்களை அறிவிப்பார்கள். ஆனால், தேர்தல் நடக்கும் காலத்தில்கூட அள்ளிக் கொடுக்க மனம் இல்லாமல் டிரெக்கிங், கோபுரம் என வெற்று அறிவிப்புகளை வெளியிட்டு ஏமாற்றப் பார்க்கிறது ஒன்றிய பா.ஜ.க. அரசு. தமிழ்நாட்டில் ஆட்சிக்கு வர முடியாது என்பது தெளிவாகத் தெரிந்தே பட்ஜெட்டில் தமிழ்நாட்டைப் புறக்கணித்திருக்கிறார்கள்.

கடந்த 2021 சட்டமன்றத் தேர்தலின் போது தாக்கல் செய்யப்பட்ட ஒன்றிய பட்ஜெட்டில் மதுரையில் தொழில் வழித்தடம், தமிழகத்தில் பல்நோக்கு கடல் பூங்கா, மதுரையிலிருந்து கொல்லம் நவீன தேசிய நெடுஞ்சாலை, சென்னை, கொச்சி உள்ளிட்ட 5 மீன் பிடி துறைமுகங்கள் மேம்படுத்தப்படும், புதிதாக 7 ஜவுளிப் பூங்கா அமைக்கப்படும் என்றெல்லாம் சொன்னார்கள். அவையெல்லாம் என்ன நிலையில் இருக்கிறது என சொல்வார்களா?

பொதுவாக ஞாயிற்றுக் கிழமைகளில் இந்தியப் பங்குச் சந்தைகளுக்கு விடுமுறையில் இருக்கும். ஆனால், ஞாயிற்றுக் கிழமை ஒன்றிய பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டதால் பங்குச்சந்தைகள் செயல்பட்டன. அதன் விளைவு என்ன தெரியுமா? பங்குச்சந்தையில் ஏற்பட்ட கடும் சரிவு காரணமாக முதலீட்டாளர்களுக்கு 10 லட்சம் கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டது. ஒன்றிய பட்ஜெட்டில் பலனே இல்லை என்பதைப் பங்குச் சந்தையே பறைசாற்றிவிட்டது.

### வெட்கமேயில்லாமல் வரவேற்று அறிக்கை விடுகிறார் பழனிச்சாமி!

தமிழ்நாட்டை முழுவது மாக புறக்கணித்த பட்ஜெட்டை வெட்கமேயில்லாமல் வரவேற்று அறிக்கைவிடுகிறார் அடிமை பழனிசாமி. சொல்வதற்கு ஒன்றுமேயில்லாமல் தொடர்ந்து 9ஆவது முறையாக நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்து புதிய வரலாற்றுச் சாதனையை படைத்துள்ள நிதி அமைச்சருக்கு வாழ்த்துகள் என்று அறிக்கை வெளியிடுகிறார் பழனிசாமி.

அ.தி.மு.க.வோ, பா.ஜ.க.வோ எத்தனை முகமூடிகளை அணிந்து வந்தாலும் வரும் சட்டமன்றத் தேர்தலில் மட்டுமல்ல இனி எப்போதும் தமிழ்நாட்டில் தலையெடுக்க முடியாது. இதனை உணர்ந்து கொண்டதால்தான் ஒன்றிய பட்ஜெட்டில் கூட தமிழ்நாட்டை வஞ்சித்திருக்கிறார்கள். பட்ஜெட்டில் தமிழ்நாட்டை ஒன்றும் செய்யாமல் வஞ்சிக்கும் பா.ஜ.க. அரசுக்கு அவர்களின் அடிமைகளுக்கும் தேர்தலில் தமிழ்நாட்டு மக்கள் தக்க பாடம் புகட்டுவார்கள்.

இவ்வாறு அமைச்சர் எஸ். ரகுபதி அவர்கள் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

# விமானிகள் பற்றாக்குறை இல்லையென பொய் கூறும் ஒன்றிய அரசு!

## மக்களின் உயிருடன் விளையாடாமல் உரிய நடவடிக்கை எடுக்க கே.இ.பிரகாஷ் வலியுறுத்தல்!

புதுடெல்லி, பிப். 4-

விமானப் போக்குவரத்து துறையில் நிலவும் கடுமையான விமானிகள் பற்றாக் குறை குறித்து, நாடாளுமன்றத்தில் ஈரோடு கே.இ.பிரகாஷ் கேள்வி எழுப்பினார்.

விமானங்களுக்கான விமானிகள் விகிதம் (Pilot Aircraft Ratio) பற்றி ஆய்வு நடத்தப் பட்டுள்ளதா, அதன்படி விமானிகளின் எண்ணிக்கையை கூட்டுவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதா என்று கேட்டிருந்தார்.

இதற்கு ஒன்றிய அரசின் தரப்பில் மக்களின் கண்முன்னாலேயே இருக்கும் நடைமுறை உண்மைகளை மறைக்கும் கயமையான பதில்களே கிடைத்துள்ளன. இதன் மூலம், மக்களின் பாதுகாப்பு மீது தங்களுக்கு எந்த அக்கறையும் இல்லை என்பதை ஒன்றிய அரசு சொல்லாமல் சொல்லியுள்ளது.

**விமானிகள் பற்றாக்குறை இல்லை என பச்சைப்பொய்:**

ஒன்றிய அரசு தனது பதிலில் “விமானிகள் பற்றாக் குறை இல்லை” எனக் கூறியுள்ளது. ஆனால், கடந்த மாதம் தான் இண்டிகோ நிறுவனம் 6000க்கும் மேற்பட்ட விமானங்களை ரத்து செய்தது. விமானிகள் பற்றாக் குறை இல்லை என்றால், எப்படி இத்தனைப் பெரிய அளவில் விமானச் சேவைகள் முடக்கப்பட்டது? லட்சக்கணக்கான பயணிகள் விமான நிலையங்களில் தவித்ததை ஒரு மாத காலத்திற்குள் மறைத்து இப்படி பொய்ப் பேசலாமா?

விமானப்போக்குவரத்து அமைச்சர் ராம்மோகன் நாயுடு அவர்களின் கூற்றின் படி, இந்தியாவில் தற்போது 834 பயணிகள் விமானங்கள், 8000 விமானிகளோடு இயங்கிக் கொண்டிருக்கின்றன.



அவரே சொல்கிறார், ஒவ்வொரு விமானத்துக்கும் தலா 10 முதல் 15 விமானிகள் தேவை என்று. இதன் படி பார்த்தால், ஏறக்குறைய 834 பயணிகள் விமானங்களுக்கு 12500 விமானிகள் வேண்டும். ஆனால், தற்போது 8000 விமானிகளே இயங்குகிறார்கள். இதற்குப் பெயர் பற்றாக் குறை அல்லாமல் வேறு என்ன?

மேலும், வரும் ஆண்டுகளில் 1700 விமானங்கள் வாங்க ஆர்டர் கொடுக்கப் பட்டுள்ளது என்றும், இதற்காக, 25000 முதல் 30000 விமானிகள் வேண்டும் என்றும் அவரே தான் சொல்லியிருக்கிறார். இதைக் கணக்கிலெடுத்தால், பற்றாக்குறையின் எண்ணிக்கை எங்கேயோ செல்கிறது.

இருக்கும் விமானங்க ளுக்கும் போதுமான விமானிகள் இல்லை, வாங்கப்போகும் விமானங்களுக்கும் போதுமான விமானிகளுக்கான உறுதி இல்லை. ஆனால், விமானிகள் பற்றாக்குறை இல்லை என பொய்ப்பேசி ஏமாற்றுகிறது ஒன்றிய அரசு.

**விமானப் பயிற்சி மையங்கள் மற்றுமொரு பொய், திசைதிருப்பல்:**

விமானப் பயிற்சி மையங்களை அதிகப்படுத்த விதிகளை உருவாக்கியிருக்கிறோம், பயிற்சிகளை மேற்பார்வையிட்டு வருகிறோம் என்று சொல்லியிருக்கிறது ஒன்றிய அரசு. ஆனால், நடைமுறை நிலவரங்கள் இந்திய விமானப் பயிற்சி சூழலின் வேறு முகத்தைக் காட்டுகின்றன.

வல்லுநர்களின் தரவுகளின் படி, இந்தியாவில் தற்போது இருக்கும் 50க்கும் குறைவான பயிற்சி மையங்களால், ஆண்டுக்கு 800 முதல் 1000 விமானிகளையே உருவாக்க முடியும். ஆனால், அமைச்சரின் கூற்றுப்படி 25000,30000 விமானிகள் என்ற எண்ணிக்கையை அடைய, வரும் ஆண்டுகளில் இந்தியாவின் தேவையோ ஆண்டுக்கு 2000 3000 விமானிகள். ஆகவே, பாதி அளவில் கூட விமானிகளை உருவாக்க முடியாத நிலையில் தான் இந்த விமானப் பயிற்சி மையங்களின் சூழல் தற்போது உள்ளது.

இந்தியாவில் ஒருவர் பயணிகள் விமானி ஆக வேண்டுமானால், 70 முதல் 90 லட்சம் வரை செலவழிக்க வேண்டிய நிலை உள்ளது. இதற்கான முக்கியக் காரணம், இந்திய விமானப் பயிற்சி மையங்களின் தரமின்மை. இதனால், வெளிநாடுகளை விட இருமடங்கு காலம் செலவழித்து முடிக்க வேண்டிய நிலை உள்ளது. இதை முறைப்படுத்தி பயிற்சிக்காலத்தை வேகப்படுத்த ஒன்றிய அரசிடம் எந்த திட்டமும் இல்லை.

மேலும், பயிற்சி முடித்த விமானிகளுக்கு CPL (Commercial Pilot License) உரிமம் வழங்குவதிலும் நிறைய தாமதம் நிலவுகிறது. இதற்குக் காரணம் என்னவென்றால், DGCAவில் நிலவும் ஆள் பற்றாக்குறை. இதனால், பல விமானிகள் உரிமத்திற்காக காத்திருக்கிறார்கள்.

நிலைமை இப்படியிருக்கிறது. ஆனால், ஒன்றிய அரசு விதிகளை வகுத்திருக்கிறோம், மேற்பார்வையிட்டு வருகிறோம்’ என்று சமாளிப்புப் பதில்களை அளித்துக் கொண்டிருக்கிறது.

**விமானிகள் பற்றாக்குறை பயணிகள் உயிருக்கான நேரடி ஆபத்து:**

விமானிகள் பற்றாக்குறை என்பது வெறுமனே வேலை வாய்ப்பு சம்பந்தப்பட்ட பிரச்சினை அல்ல. இது, விமான நிறுவனங்கள் Shift Rotation ல் சமரசம் செய்து கொள்ள வைக்கிறது. இதனால், விமானிகளின் பணிச் சுமையும், அவர்களின் மன அழுத்தமும் பலமடங்கு அதிகரிக்கிறது. விளைவாக, விமானப் பயணிகளின் பாதுகாப்பு கத்திமுனையில் கொண்டு வந்து நிறுத்தப்படுகிறது.

ஒவ்வொரு ஆண்டும் விமானிகளின் சோர்வு குறித்து DGCAவுக்கு வரும் புகார்கள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. அவர்கள் தூக்கக் கலக்கத்தில் பயணிப்பது, மயங்கி விழுவது, உடல்நிலை பாதிக்கப்படுவது ஆகியவற்றைப் பற்றிய செய்திகளும், ஆய்வுகளும் ஊடகங்களில் வெளிவந்தபடியே இருக்கின்றன.

ஆனால், ஒன்றிய அரசு இதில் தனக்கு எந்தப் பொறுப்பும் இல்லை என்பதைப் போல அனைத்தையும் கண்மூடி வேடிக்கைப் பார்த்து அமர்ந்திருக்கிறது.

விமானிகளின் எண்ணிக்கையை பலமடங்கு உயர்த்த வேண்டியது மிக மிகக் கட்டாயம். அதற்கு உரிய அளவிலான பயிற்சி மையங்கள், அதன் ஆள் போதாமைகளைக் களைவதற்கான திட்டங்கள், DGCAவின்பற்றாக் குறை பிரச்சனையை சரி செய்து, உரிமம் வழங்குவதை துரிதப்படுத்தல் ஆகிய நடவடிக்கைகளை விரைந்து செயல்படுத்த வேண்டும்!

இவ்வாறு கே.இ.பிரகாஷ் எம்.பி. வலியுறுத்தியுள்ளார்.



பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்களின் 57 வது நினைவு தினத்தையொட்டி கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பாக, மாவட்டச் செயலாளர் மதியழகன் எம்.எல்.ஏ. தலைமையில் கிருஷ்ணகிரி –பெங்களூரு சாலையில் அமைதி ஊர்வலம் சென்று, கிருஷ்ணகிரி புதிய பேருந்து நிலையம் அருகில் உள்ள பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து, மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் செங்குட்டுவன், நாகராஜ், சீனிவாசன், அன்பரசு, நகர பொறுப்பாளர்கள் அஸ்லாம், வேலுமணி உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள், கழகத் தோழர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.


# மறைந்தாளு(வு)ம் அண்ணா; மனமாளும் அண்ணா!

தொண்டைநாடு
சான்றோர்கள்
தோன்றுமிடம் என்கின்ற
பண்டைமொழி மெய்யாகப்
பாலாற்றுக் காஞ்சியிலே
கண்கவர் பட்டுநெய்யும்
கைத்தறிக் குடும்பத்தில்
மண்குளிர, பெற்றவர்
மனங்குளிரப் பிறந்தவர்
அண்ணா,நீர் இளமைமுதல்
அறிவாகத் திகழ்ந்தவர்,
கண்ணாகப் போற்றிடும்
கல்வியிற் சிறந்தவர்,
விண்புகழ் பெற்றாலும்
விருப்பங்கள் துறந்தவர்!
வெண்ணிலவுக் குளிர்ச்சியும்
விரிகதிர் மிளிர்ச்சியும்
பண்ணுலவும் இனிமையும்
பண்பாக வளர்ந்தவர்!
கண்ணறப் பேசியும்
கருத்தொளிர எழுதியும்
மண்ணதிர வைத்தவர்
மடமையை வதைத்தவர்
வெண்தாடிப் பெரியார்பின்
அறிவேந்தி விரைந்தவர்
கண்ணாடி போலமனம்
களங்கமற்றுத் துலங்கியவர்
நுண்ணோக்குக்
கொண்டவர்
நோயுற்ற சமுதாயப்
புண்ணாற்ற வந்தவர்
பொருகலன் தந்தவர்
மண்ணாற்ற முடியாமல்
மறைந்துவிட்ட பேரறிஞர்
அண்ணாவின் நினைவுநாள்
ஆழ்மனத்தில் உறைகின்ற
எண்ணூறும் நினைவுகள்
எத்தனையோ நிகழ்வுகள்
அண்ணாவை மறக்குமோ?
ஆதவன் இறக்குமோ?

அண்ணா,நீர் பிறந்ததனால்
அல்லவோ தமிழர்கள்
கண்ணிருந்தும் குருடராய்க்
காதிருந்தும் செவிடராய்
உண்கின்ற வாயிருந்தும்
உரையாத ஊமையராய்
மண்ணாகக் கிடந்தவர்கள்
மடமையில் வளர்ந்தவர்கள்
உண்மையை
உணர்வதற்கும்
உரிமையைப் பெறுவதற்கும்
எண்ணத்தைத் தூண்டியே
எழுச்சியை மீட்டியே
வண்ணத்தை
அறியவைத்தீர்
வண்டமிழ் போற்றவைத்தீர்
திண்மையை ஊட்டிவிட்டீர்
திராவிடம் காட்டிநின்றீர்
பெண்ணடிமை
போகவைத்தீர்
பேச்சுரிமை காத்துநின்றீர்
மண்ணுரிமை மீட்பதற்கு
மாபெரும் இயக்கமொன்றை
எண்ணியே தோற்றுவித்தீர்
இன்றுவரை ஆளவைத்தீர்!

ஊர்ஊராய்ச் சென்றுநீர்
ஓயாமல் பேசியதால்
நீர்ஊறும் காவிரிபோல்
நிறையவே எழுதியதால்
வேர்உற ஆழமாய்
விண்ணுற இயக்கத்தைச்
சீர்ஊரும் தன்மானம்
சீர்திருத்தம் பகுத்தறிவு
கார்ஊரும் வானம்போல்
கதிர்ஊறும் ஒளியைப்போல்
பார்உறக் காட்டியதால்
பன்மடங்கு நீட்டியதால்

தேர்ஊரும் அழகுமிகு
திருவாரூர்க் கலைஞரும்
பாராளும் உரிமைபெற்றார்
பார்போற்றும் திறமையுற்றார்!
நீர்ஆண்ட இடத்திருந்து
நீண்டபல திட்டங்கள்
ஊர்போற்றத் தளபதி
உருவாக்கி முடிக்கின்றார்
யார்எனினும் எவர்எனினும்



யாதெனினும் அண்ணா,உம்
பேர்சொன்னால் அன்றிஒரு
பெருவெற்றி ஏதிங்கே?

ஆயிரம் ஆண்டுக்கோர்
அருந்தமிழ் செய்தவத்தால்
ஞாயிறுபோல் பிறந்தவர்,
நானிலத்தில் சிறந்தவர்
ஞாயிறு சின்னமென
நன்றாகத் தேர்ந்தவர்
தாயினும் கனிந்தவர்
தன்னலம் முனிந்தவர்
கோயிலும் கடவுளும்
கும்பிடா திருந்தவர்!

சேயினும் திறந்தவுள்ளம்
செந்தமிழ் சிறந்துதுள்ளும்
தூயவர்,கழகத்தின்
தொண்டருளம் வாழ்பவர்
மாயவர்,பேச்செழுத்தால்
மயக்கித்தான் விட்டவர்;
தீயவர் ஆனாலும்
திருந்தித்தான் வாழ்வதற்கு
ஆயவழி செய்தவர்
அன்புநீர் பெய்தவர்!

பேராசிரியர்
**மா.செல்வராசன்**

நோயிலே வீழ்ந்திங்கு
நூறாண்டு வாழாமல்
காயிலே உதிர்ந்துவிட்டீர்!
கண்ணீரை ஓடவிட்டீர்,
தாயிலாக் குழந்தையாகத்
தமிழ்நாடு தவிக்கவிட்டீர்
மாயினும் எங்களுளம்
மறையாத மன்னவரே,
போயினும் ஆண்டுபல
பொலிகின்றீர் நெஞ்சங்கள்
ஆயினும் அண்ணா,நீர்
ஆதவன் அல்லவோ?
ஆயிரம் குயில்களின்
அருங்குரலால் சொல்லவோ?

வடபுலம் ஆளுவோர்
வலம்வந்தே எதிர்த்தாலும்
முடவர்கள் என்பது
முடிவிலே தெரிந்துவிடும்!
குடமாக இருப்பவர்கள்
குன்றான நமையெதிர்க்க
அடமாக முயன்றாலும்
அங்குலம் நகராமல்
திடமாக இருப்பவர்கள்
திராவிடத் தமிழரெலாம்
புடம்போட்ட தங்கங்கள்
புவியாளும் சிங்கங்கள்!

கடமையுடன் கண்ணியம்
கட்டுப்பா டெனமூன்றும்
தடமாகக் கொண்டவர்கள்
தலைநிமிர்ந்தே
வெல்பவர்கள்!
உடன்பட்டால் ஏற்றிடுவர்
உயர்வாகப் போற்றிடுவர்
இடர்தந்தால் ஒழித்திடுவர்
இல்லாமல் அழித்திடுவர்!
மடம்பட்டுப் பேசிய
மன்னர்கள் கனகவிசய்
பிடிபட்டுக் கல்சுமந்தார்
பேடிகள் பல்லுடைந்தார்
இடிபட்டுப் பலரிங்கே
இல்லாமற் போனதெல்லாம்
பொடிபோடும் அண்ணாநீர்
புகன்றவை மறப்போமா;
நெடியாக எப்போதும்
நெஞ்சில்வைத் திருப்போமே!

ஆட்சியில் நீர்இருந்த
ஆண்டுகள் இரண்டெனினும்
காட்சிக்கோ எளியராய்,
கனிவிலே இனியராய்
மாட்சியுடன் ஆண்டீரே
மாநிலத் தன்னாட்சி
மீட்சிக்குக் குரல்கொடுத்தீர்
மீண்டால்தான் மாநிலங்கள்
ஆட்சிசெய முடியுமென்றீர்
இல்லையேல் அதிகாரம்
நீட்சிபெறும் தில்லியிலே
நிலைமைகெடும்
இங்கென்றீர்
சாட்சியின்று தமிழ்நாடு
சங்கிலியில் பிணைப்புண்டு!

ஒருமொழிவைத் துலகாண்ட
ஒருகாலத் தமிழ்நாட்டில்
இருமொழிக் கொள்கையே
இயங்குமெனச் சட்டமிட்டீர்
தெருமொழியாம் இந்தியைத்
திணித்திங்கே
மும்மொழியாய்
வருவதைத் தமிழ்நாடு
வழிமறித்துத் திருப்புமென்றீர்
திருப்பெயராம் தமிழ்நாடு
திகழவும் செய்திட்டீர்
குருக்களில்லாச் சீர்திருத்தக்
கொள்கைமணம்
செல்லுமென்றீர்!
இருந்திருந்தால் நீர்இன்னும்
இமயமும் தாழ்ந்திட
அருஞ்செயல் எத்தனையோ
ஆற்றித்தான் இருப்பீரே!
தருக்கர்கள் இடர்களைத்
தடுத்திங்கே தளபதி
பொருகின்றார் தங்கள்வழி
போகின்றார்;
வெல்வதுண்மை!

மக்களெலாம் உமைக்காண
மாபெருங் கடலாகத்
திக்கெட்டும் குலுங்கிடத்
திரண்டெங்கும் திணறினரே!
துக்கத்தில் மூழ்கினரே
துயர்வெள்ளம் ஆழ்ந்தனரே!
பக்கமெலாம் எழும்ஓலம்
பாரீரோ,அண்ணா,யாம்
திக்கின்றிப் போனோமே
திரும்பித்தான் வாரீரோ?

அக்காலன் குருடனாய்
ஆனானோ?பேரறிவு
மிக்க உமை ஏனிங்கு
விழைந்தானோ?
அவனுந்தான்
இக்கூட்டம் காண்கையில்
இரங்கித்தான் அழுவானே!
தக்க உமைக் கவர்ந்ததொரு
தவறென விழுவானே!
இக்கணம் வரையிலும்
இப்படியோர் துயர்வலம்
துக்கத்தால் எழுந்த
தில்லை;
தொடர்ந்தின்றும்
அழுவதில்லை!

இயற்கைதான் தமிழருக்கு
இழைத்துவிட்ட
பெருங்கொடுமை
துயரினும் துயராகும்
தொடர்ந்தெழும்
அலையாகும்!
புயலாகச் சுழன்றடித்துப்
போக்கிவிட்ட அண்ணாவின்
உயிரெங்கே சென்றதென
உலகெலாம் தேடிவரத்
துயின்றிட அண்ணாநீர்
தொட்ட இடம் கடலோரம்!
வயிற்றினும் வாயினும்
வையந்தான் அடித்தழும்!
பயிற்றிட மேன்மேலும்
படிக்கத்தான் போனீரோ?
உயிர்த்திட வருவீரோ?
உணர்வுகள் தருவீரோ!